**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலன் – தோட்டக்கலை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - அறிவிப்பு எண்.33 – தமிழ்நாடு முந்திரி வாரியத்தின் செயல்பாட்டிற்கு மாநில நிதியில் ரூ.18,20,000/- நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை**

அரசாணை (நிலை) எண்.244

நாள்:17.09.2025.
திருவள்ளுவர் ஆண்டு 2056,
விசுவாவசு வருடம்,
புரட்டாசித் திங்கள் 1-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள். (அறிவிப்பு எண். 33)
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண்.MIS/5176/2025, நாள்:12.05.2025 மற்றும் 19.06.2025.
3. அரசாணை (நிலை) எண்.231, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க2) துறை, நாள் 02.09.2025.

*******

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட 2025–2026 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் இன்ன பிறவற்றுள் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

<u>அறிவிப்பு எண்:33-தமிழ்நாடு முந்திரி வாரியம்</u>

"முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரி சார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கவும், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாடு முந்திரி வாரியம் (Tamil Nadu Cashew Board) ஏற்படுத்தப்படும். இதனால் முந்திரி சாகுபடி செய்யும் உழவர்களும், அதனைச் சார்ந்த தொழில் செய்யும் கிராமப்புர மக்களும் அதிகளவில் பயனடைவார்கள்."

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கடலூரைத் தலைமையிடமாகவும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் கொண்டு தமிழ்நாடு முந்திரி வாரியம் மற்றும் நிர்வாகக் குழுவினை அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து, இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைத்திட ஏற்படும் செலவினம் மற்றும் வாரியத்தின் நடைமுறை செலவினங்களுக்கு மாநில அரசு நிதியில் ரூபாய் ஒரு கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்த பின், தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைத்திட ஏற்படும் செலவினம் மற்றும் நடைமுறை செலவினங்களுக்கு கீழ்க்கண்டவாறு தொடரா செலவினமாக ரூ.5,80,000/- மற்றும் தொடரும் செலவினமாக ரூ.12,40,000/- என மொத்தம் ரூ.18,20,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | பொருள் | நிதி (ரூபாய்) |
|---|---|---|
| I | **தொடரா செலவினம்** | |
| 1. | வாகனம் | வாடகை வாகனம் அமர்த்திக் கொள்ளலாம். (மாதம் ரூ.40,000) |
| 2. | கணினி (3 எண்கள்) | 2,00,000 |
| 3. | அச்சு இயந்திரம் (3 எண்கள்) | 65,000 |
| 4. | இணைய வசதி | 15,000 |
| 5. | நாற்காலிகள், மேசைகள், அலமாரிகள் | 2,00,000 |
| 6. | எதிர்பாரா செலவுகள் | 50,000 |
| 7. | குளிர் சாதனம் (AC) (1 எண்) | 50,000 |
| | மொத்தம் (I) | 5,80,000 |
| II | **தொடரும் செலவினம்** | |
| 1. | தொழில் நுட்ப அலுவலர் (1 நபர்) Technical Officer (8*50,000) | 4,00,000 |
| 2. | தொழில் நுட்ப அலுவலர் பதப்படுத்துதல் (Technical Officer Processing) ( 8*50,000) | 4,00,000 |
| 3. | தரவு உள்ளீட்டாளர் (Data Entry Operator) (8*15000) | 1,20,000 |
| 4. | வாடகை வாகனம் (8*40,000) | 3,20,000 |
| | மொத்தம் (II) | 12,40,000 |
| | மொத்தம் (I + II) | 18,20,000 |

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | நிதி (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 2401 – 00 - பயிர் வளர்ப்பு - 110 - பயிர்க் காப்புறுதி -மாநிலச் செலவினங்கள் - JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 321 - மோட்டார் வண்டிகள் 03 - வாடகைக் கட்டணங்கள் (த.தொ.கு 2401-00-110-JO-321-03) | 3,20,000 |
| 2. | 2401 – 00 - பயிர் வளர்ப்பு - 110 - பயிர்க் காப்புறுதி - மாநிலச் செலவினங்கள் - JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 376 - கணினியும் துணைப் பாகங்களும் – 01 - வாங்குதல் (த.தொ.கு 2401-00-110-JO-376-01) | 2,00,000 |

| | | |
|---|---|---|
| 3 | 2401 - 00 - பயிர் வளர்ப்பு - 110 - பயிர்க் காப்புறுதி - மாநிலச் செலவினங்கள் - JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 319 - இயந்திரமும் சாதனமும் - 01 - வாங்குதல் (த.தொ.கு 2401-00-110-JO-319-01) | 1,15,000 |
| 4. | 2401 – 00 - பயிர் வளர்ப்பு - 110 - பயிர்க் காப்புறுதி -மாநிலச் செலவினங்கள் - JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 381 - வலைப்பின்னல் மற்றும் இணைப்புகள் - 01 - வலைப்பின்னல் (த.தொ.கு 2401-00-110-JO-381-01) | 15,000 |
| 5. | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 110 - பயிர்க் காப்புறுதி - மாநிலச் செலவினங்கள் – JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 305 - அலுவலகச் செலவுகள் – 05 - அறைகலன் (த.தொ.கு 2401-00-110-JO-305-05) | 2,00,000 |
| 6. | 2401 – 00 - பயிர் வளர்ப்பு - 110 - பயிர்க் காப்புறுதி - மாநிலச் செலவினங்கள் - JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 305 - அலுவலகச் செலவுகள் - 02 - ஏனைய சில்லறைச் செலவுகள் (த.தொ.கு 2401- 00-110-JO-305-02) | 50,000 |
| 7. | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 110 - பயிர்க் காப்புறுதி - மாநிலச் செலவினங்கள் – JO - தமிழ்நாடு முந்திரி வாரியம் - 333 - தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் - 04 - ஒப்பந்த ஊதியம் (த.தொ.கு 2401-00-110-JO- 333-04) | 9,20,000 |
| | மொத்தம் | 18,20,000 |

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புதுப்பணி” (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.-1)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963 இல் உள்ள அட்டவணை “A” படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.1) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2025-2026 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(வ.செ.பொ-1/வேளாண்மை-உ.ந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் 12.09.2025-ஆம் நாளிட்ட அ.சா.எண்.10481350/நிதி(வே-உ.ந)/2025-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 2025091338 .

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
கூடுதல் தலைமைச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்
நிறுவனங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
இயக்குநர், முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குநரகம்,
ஒன்றிய அரசு, கொச்சி, கேரள மாநிலம்.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு வனத் தோட்டக்கழகம், திருச்சி-620101.
நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு உணவு
பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx)
கிண்டி, சென்னை–32.
துணை வேந்தர்/ பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
மண்டல இயக்குநர் மற்றும் உதவி பொது மேலாளர், வேளாண் மற்றும்
பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்
(APEDA), நுங்கம்பாக்கம், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை – 5.
பேராசிரியர் மற்றும் தலைவர் – மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாநில விதைமேம்பாட்டு முகமை, சென்னை – 5.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின்
தனிச்செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை- 9.
நிதித் (வே.உ.ந.) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு.2/வ&தி) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10481350/தோ.க.2/2025.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்